6 பொதுப்பணித்துறையில் காலியாக உள்ள உதவி வரைவாளர், இளநிலை வரைதொழில் அலுவலர், வரைதொழில் அலுவலர் பணியிடங்களை நிரப்பிட தேவையான நடவடிக்கைகளை எடுக்க மையச் சங்கத்தை வேண்டி தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

**சேலம் கிளை:**

சேலம் கிளையின் பொதுக்குழு கூட்டம் 21.12.2013 சனிக்கிழமையன்று மாலை 3.00 மணியளவில் சேலம் கிளை சேலம் கிளை கட்டிடத்தில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவங்கியது. சேலம் கிளையின் தலைவர் பொறி.பி.சண்முகம் அவர்கள் கூட்டத்தை தலைமை தாங்கி நடத்தினார். மேற்கு மண்டலச் செயலாளர் பொறி.எஸ்.ஆர். சுப்ரமணியம் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். கிளையின் செயலாளர் பொறி.இரா.வேதநாராயணன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தியதையடுத்து அவை அறிமுகம் நடைபெற்றது. சேலம் கிளைத் தலைவர் பொறி.பி.சண்முகம் தலைமையுரையாற்றினார். அதை தொடர்ந்து கிளையின் செயல்பாடுகள் மற்றும் உறுப்பினர் வருகை குறைவு குறித்து செயலாளர்பொறி.இரா.வேதநாராயணன் அவர்கள் உரையாற்றினார். அதை தொடர்ந்து சிறப்பு அழைப்பாளர்களுக்கு பொன்னாடை போர்த்தி கவுரவிக்கப்பட்டது. மேற்கு மண்டலச்

செயலாளர் பொறி.எஸ்.ஆர்.சுப்ரமணியம் அவர்கள் மையசங்க செயல்பாடுகள் மற்றும் நூற்றாண்டு விழா குறித்து பேசினார். உறுப்பினர்களின் கருத்துகளுக்கு விளக்கமளித்தார். உறுப்பினர்களுக்கு 2014ம் ஆண்டுக்கான டைரி மற்றும் நாட்காட்டி வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து மூத்தப்பொறியாளர் மா.பலராமன் அவர்கள் ஓய்வுபெற்ற பொறியாளர் சங்கம். டிப்ளமோ பொறியாளர் பேரவை செயல்பாடுகள் குறித்து பேசி அமர்ந்தார். அதன்பின் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றிய பின் கூட்டம் இனிதே நிறைவேறியது.

**தீர்மானங்கள்:**

1. அரசாணை எண்.1ன்படி தொழில்நுட்ப உதவியாளர் பதவியில் இருந்து உதவிப்பொறியாளர்களாக பதவி உயர்வு பெற்றவர்களுக்கு விரைவில் பணிவரன்முறை பெற்றுத்தர இக்கிளை மையச்சங்கத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

2. இளநிலைப் பொறியாளர் பணிவரன்முறை விரைவில் பெற்றுத்தர கேட்டுக்கொள்ளப்படுகிறது.

3. இளம்பொறியாளர்கள் பட்டப்படிப்பு முடித்தவர்களுக்கு உதவிப் பொறியாளர்களாக பெயர் மாற்றம் செய்யப்பட்டவர்களுக்கு பணிவரன்முறை ஆணை பெற்றுத்தரவேண்டி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4. தமிழ்நாடு பொறியியல் சங்க சேலம் கட்டிடம் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள இப்பொதுக்குழு ஒப்புதல் அளிக்கிறது.

5. பதவி பெயர் மாற்றம் செய்யப்பட்ட உதவிப் பொறியாளர்களுக்கும் தமிழ்நாடு தேர்வாணையத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட 2007 - 2008 உதவிப் பொறியாளர்க்கும் இடையே உரிய முதுநிலைப்பட்டியல் தரவரிசை செய்யப்படவேண்டும். அதற்குண்டான அனைத்து நடவடிக்கைகளும் மையச்சங்கம் எடுக்க வேண்டி தீர்மானம் வேண்டப்படுகிறது.

6. 2014ம் ஆண்டுக்கான நாட்காட்டி நாட்சுவடியை சிறப்பாக தயாரித்து உரியகாலத்தில் வழங்கிய மையச்சங்கத்தில் பணிபுரிந்த அனைவரையும் கிளைச்சங்கம் பாராட்டுதல்களை தெரிவித்துக்கொள்கிறது.

7. முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் நீண்டகாலமாக நிலுவையில் உள்ள பணிநீக்கம் செய்யப்பட்ட இளம் பொறியாளர் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களின் பணிமுறிவுக்கால பிழைபொறுத்தல் (Condonation of break in service) கருத்துருவை அரசுக்கு அனுப்பி உடன் ஆணை பெற்றுத்தர இக்கிளை மையச் சங்கத்தை கேட்டுக்கொள்கிறது.

8. பிரிவுக்கு ஒரு தொழில்நுட்ப உதவியாளர் பணியமர்த்த பதவியை பெற்றுத்தர இக்கிளைச்சங்கம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

9. ஆசிரியர்களுக்கு உள்ளதுபோல கவுன்சிலிங் முறையில் பணிமாற்றம் செய்வதற்கான ஆணை பெற்றுத்தர இக்கிளை மையச்சங்கத்தை கேட்டுக்கொள்கிறது.

**தருமபுரி கிளை**

தமிழ்நாடு பொறியியல் சங்கம் பொ.ப.து., தருமபுரி கிளைப் பொதுக்குழு தருமபுரியில் அமைந்துள்ள பொதுப்பணித்துறை இல்லத்தில் 21.12.2013 காலை 10.45 மணி அளவில் தமிழ்தாய் வாழ்த்துடன் துவங்கியது. கிளை உறுப்பினர் பொறியாளர் பி.நாகராஜ், கூட்டத்திற்கு வந்திருந்த உறுப்பினர்களை வரவேற்று, உறுப்பினர்களின் ஒற்றுமை பற்றி விவரித்தார். பின்னர் மையச் சங்க நடவடிக்கைப்பற்றி மேற்கு மண்டல செயலர், பொறியாளர். எஸ்.ஆர். சுப்பிரமணியம் உரையாற்றினார். பின்னர் கிளை வரவு செலவு கணக்குகளை பொருளாளர் டி.வெங்கடேசன், அவைக்கு சமர்ப்பித்து ஒப்புதல் பெற்றார்.

பின்னர் கிளையின் காலியாக உள்ள தலைவர் மற்றும் செயலர் தேர்தல் நடைபெற்றது.

| | |
|---|---|
| தலைவர்: | பொறியாளர். U.நகுலன், DCE., B.E.,<br>உதவி செயற்பொறியாளர், பொபது.,<br>தொழில்நுட்ப கல்வி உபகோட்டம், கிருஷ்ணகிரி. |
| செயலர்: | பொறியாளர். பி.பாலசுப்பிரமணியம், DCE.,<br>இளம்பொறியாளர், பொபது.,<br>தொப்பையாறு நாகாவதி பிரிவு, தருமபுரி. |

பின்னர், 2014 ம் ஆண்டுக்கான நாட்காட்டி மற்றும் நாட்சுவடி மற்றும் கிளையின் சார்பாக நாட்காட்டி உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு கிளைச் செயலர் நன்றியுரையாற்றினார். பின்னர் கீழ்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானங்கள்:**

- இளநிலைபொறியாளர் முதுநிலைப் பட்டியல் வெளியிட்டது போல் உதவிப் பொறியாளர் முதுநிலைப்பட்டியல் வெளியிட நடவடிக்கை எடுக்க மையச் சங்கத்தை இக்கிளைச் சங்கம் கேட்டுக்கொள்கிறது.
- பிரிவுக்கு ஒரு தொழில்நுட்ப உதவியாளர் பதவி உருவாக்க நடவடிக்கை எடுக்க மையச் சங்கத்தை கேட்டுக்கொள்கிறது.
- அரசு ஆணை எண் 1 மற்றும் 66 விதி திருத்தம் பெற விரைவான நடவடிக்கை எடுக்க மையச் சங்கத்தை கேட்டுக்கொள்கிறது.
- கிளை உறுப்பினர் திரு.சேதுமாதவன், தொழில் நுட்ப உதவியாளருக்கு பதவி உயர்வு பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறது.
- நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ள இளம் பொறியாளர் மற்றும் உதவிபொறியாளர் பணி வரன் முறை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறது.
- ஆசிரியர்களுக்கு உள்ளது போல் பணி மாற்றல் கவுன்சிலிங் பெற ஆணை பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கிறது.
- துறையில் பணியாற்றும் பொறியாளர் சொந்த தாலுக்காவில் பணிபுரிய ஆணை பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கிறது.

- இளம் பொறியாளர்களுக்கு ஊதிய மாற்றம் பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கிறது.
- முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் பல ஆண்டுகளாக நிலுவையில் இருக்கும் இளம் பொறியாளர்கள் பணி முறிவு காலம் முன்னில் விரைவில் அரசுக்கு அனுப்பி ஆணை பெற்றுத்தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.
- 2014ம் ஆண்டு நாட்காட்டி மற்றும் நாட்சுவடி சிறப்பாக அமைத்துக் கொடுத்தமைக்கும், மற்றும் விரைவில் அனுப்பிவைத்தமைக்கும் இக்கிளை வெளியீட்டுச் செயலரை பாராட்டுகிறது.

## பொறுமை தரும் பெருமை

மின்னிடும் வைரமாய் மிளிர்வதற்கு,
நிலக்கரிக்குப் புதையுறும் பொறுமை வேண்டும்!
மன்னுபுகழ் பெறுவதற்கு மானிடர்க்கு,
மலையளவு தொண்டாற்றும் பொறுமை வேண்டும்!
சிறந்ததொரு கல்லதனை சிலையாய் மாற்ற
சிற்பியின் கைகளுக்குப் பொறுமை வேண்டும்!
பிறவி முதல் மழலையினை மனிதனாக்க
பெற்ற தாய்க்கு முற்றிலுமாய்ப் பொறுமை வேண்டும்!
வரம் வேண்டித் தவமியற்றும் ஞானியர்க்கும்
துறவறத்தில் பிறழாத பொறுமை வேண்டும்!
ஆராய்ந்து அற்புதங்கள் படைப்பதற்கு
அறிவியலார்க்கு அளவற்ற பொறுமை வேண்டும்!
புரியாத எண்ணத்தால் கலகம் செய்யும்
புல்லர்களை வெல்வதற்குப் பொறுமை வேண்டும்!
நிதி திரட்டி தன் வயிற்றை நிரப்பிக் கொள்ளும்
நீசர்களைப் பொறுப்பதற்குப் பொறுமை வேண்டும்!
ஊதியத்தில் சமன்பாடு ஆணை பெறவே
உற்ற காலம் வரும் வரையில் பொறுமை வேண்டும்!
பொறுமையுடை மனங்களே இமயம் ஆளும்
பொறுமையிலா மனங்களோ தீயில் மாளும்!

**- என். கிருஷ்ணமூர்த்தி,**
**உதவி செயற்பொறியாளர்(பொ.ப.து.,) ஓய்வு.**

01.02.2014 அன்று விருதுநகரில் நடைபெற்ற தமிழ்நாடு பொறியியல் சங்க மாநில செயற்குழு கூட்ட நடவடிக்கை குறிப்புகள் அடுத்த மாத பொறியியல் கதிரில் வெளியிடப்படும்.

**- வெளியீட்டுச் செயலாளர்**

## ஜனவரி 2014 மாத பொறியாளர் இதழில் இருந்து

TNPSC மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உதவிப் பொறியாளர்களை மட்டுமே பிரிவு மட்டத்தில் பணியமர்த்த வேண்டுமென தலைமை சங்கத்தினை கோருவது என தீர்மானிக்கப்பட்டது.

தமிழக பொதுப்பணித்துறையில் மீதமுள்ள Overseer காலியிட பணிகளை பொதுப் பிரிவாக மாற்றி, காலியாக உள்ள இடங்களுக்கு பொறியாளர்களை நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்க மையச்சங்கத்தை இக்கிளைச்சங்கம் வலியுறுத்துகிறது.

உதவிப் பொறியாளர்கள் (Degree Holders) தமிழ்நாடு பொறியியல் பணிதொகுதியின் (Tamilnadu Engineering Service) கீழ் வருகின்றனர். ஆனால் இளநிலைப் பொறியாளர்கள் (Diploma Holders) தமிழ்நாடு பொறியியல் சார்நிலை பணிதொகுதியின் (Tamilnadu Engineering Subordinate Service) கீழ் வருகின்றனர். இந்நிலையில் இளநிலை பொறியாளர்களை ஒப்பிட்டு உதவிப் பொறியாளர்களுக்கு ஊதிய நிர்ணயம் செய்தது வருந்தத்தக்கது.

எங்களுக்குக் கீழ் பணியாற்றும் வரைவாளர்கள் (Draughting Officers) / இளநிலைப் பொறியாளர்கள் (Junior Engineers) ஒப்பிட்டு பட்ட பொறியாளர்களாகிய எங்கள் சம்பளத்தைக் குறைத்துப் பரிந்துரை செய்யபப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது எங்களுக்கு மிகவும் வருத்தத்தினை தருகிறது.

உதவிப் பொறியாளர் பதவிக்கு தமிழ்நாடு பொறியியல் சார்பணியிலுள்ள தலைமை வரைதொழில் அலுவலர் என்ற பதவி ஊட்டுப்பதவியாகும். ஆனால் அந்த ஊட்டுப்பதவிக்கு சம்பள விகிதம் ரூ.15600-39400+ தர ஊதியம் ரூ.5700 அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் உதவிப் பொறியாளர்களுக்கு அதை விட கூடுதல் சம்பள விகிதம் வழங்காமல், குறைந்தபட்சம் ஊட்டுப்பதவிக்கு சமமாக ஒரு நபர் குழுவால் அளிக்கப்பட்டரூ.15600-39100+ தர ஊதியம் ரூ.5400யும் குறைத்து ரூ.9300-34800 + தர ஊதியம் ரூ. 5100 என அரசாணை எண்.242ல் கொடுக்கப்பட்டுள்ளது.

1980ம் ஆண்டுக்கு முன்னால் தமிழ்நாட்டில் மிக குறைவான பொறியியல் கல்லூரிகளே இருந்த படியால், பட்டதாரிப் பொறியாளர்கள் எண்ணிக்கை கணிசமான அளவில் இல்லாத காரணத்தினால், பட்டயப் பொறியாளர்கள் (Diploma Holders) 3:1 என்ற விகித அடிப்படையில் பணி நியமனம் மற்றும் பதவி உயர்வு அளிக்கப்பட்டது.

இப்பொழுதும் கூட, பொறியியல் துறைகளில் உள்ள வடிவமைப்புப் பிரிவுகள், ஆராய்ச்சி நிலையங்கள், நவீன தொழில்நுட்பம் சார்ந்த பெரிய திட்டப்பணிகள் போன்றவற்றில் இளநிலைப் பொறியாளர்கள் நியமிக்கப்படுவதில்லை. பெரும்பாலும் சிறுசிறு பராமரிப்புப் பணிகள், சிறிய கட்டுமானப் பணிகள் போன்றவற்றிலேயே இளநிலைப் பொறியாளர்கள் பணியமர்த்தப்படுகிறார்கள். மேலும் இளநிலைப் பொறியாளர்கள் பட்டப் பொறியாளர்களை விட கல்வித் தகுதியில் குறைவானவர்கள். தவிர செய்யும் பணியிலும் தொழில்நுட்பம் வாய்ந்த பணிகள்யாவும் பட்டப் பொறியாளர்களினாலேயே செய்யப்படுகிறது. ஆகவே, ஊதியக்குறைதீர் குழு இளநிலைப் பொறியாளர்களோடு (Diploma Holders) பட்டதாரிப் பொறியாளர்களை (Degree Holders) ஒப்பிட்டு சம்பளத்தைக் குறைத்திருப்பது நியாயமற்றது. மேலும், மேற்படி அரசாணையில் உதவிப் பொறியாளர்களுக்கும் இளம் பொறியாளர்களுக்கும் உள்ள சம்பள விகிதத்தின் இடைவெளியை குறைப்பதற்காக மட்டுமே உதவிப் பொறியாளர்களின் சம்பள விகிதத்தை குறைத்ததாக ஆணையிட்டுள்ளதை ஏற்க இயலவில்லை. மேலும், உதவிப் பொறியாளர்கள் துறையில் உயர்மட்ட பதவிகளை வகிக்க பயிற்சி பதவியாகவும் இளம் பொறியாளர்கள் துறையின் கீழ்மட்ட பதவிகளுக்கு மட்டுமே என்றும், இந்த இரு பதவிகளையும் ஒப்பிடுவது ஏற்க தக்கதல்ல என இரண்டாவது ஊதிய குழுவிலேயே பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

மத்திய பொதுப்பணித்துறையில் (CPWD), பிரிவு அலுவலர் மட்டத்தில் பணியாற்றுவதற்கு குறைந்த பட்ச கல்வித்தகுதி பட்டயப்படிப்பு தான் (Diploma Engineering). பட்டப்படிப்பு அல்ல (Degree Engineering).

மத்திய தேர்வாணையம் (UPSC) மூலம் பட்டப் பொறியாளர்கள் ரயில்வே துறை, எல்லை பாதுகாப்பு சாலை பணிகள் போன்ற துறைகளுக்கு தேர்வு செய்வது போலவே தமிழகத்திலும் பட்டப் பொறியாளர்கள் மாநில பணியில் தமிழ்நாடு தேர்வாணையத்தின் மூலம் உதவிப் பொறியாளர்களாக தேர்வு செய்யப்படுகிறார்கள். அவ்வாறு தேர்வு செய்யப்படும் உதவிப் பொறியாளர்கள் மத்திய அரசின் கீழ் வரும் துறைகளில் (உதாரணம் மத்திய தரை வழி போக்குவரத்துத் துறை) செயற்பொறியாளர்களாகவும் உதவி கோட்டப் பொறியாளர்கள் கண்காணிப்புப் பொறியாளர்களாகவும் அயற்பணியில் பணியாற்றுகிறார்கள். எனவே தமிழகத்தில் பணிபுரியும் உதவி பொறியாளர்களை, CPWDல் பிரிவு மட்டத்தில் பணிபுரியும் AE/JE-யுடன் ஒப்பிடுவது சரியாகாது.



## என்று மடியும் இந்த அடிமையின் மோகம்?

ஆர்.கே.சுந்தரம்,
உதவி செயற்பொறியாளர்,
(பணி நிறைவு)
சென்னைக் கிளை.

ஜனவரி 1 2014 தினமலர் நாளிதழில் டீ கடை பெஞ்ச் -ல் ஒரு செய்தியைப் படித்ததும் சற்று அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன்.

பொதுப்பணித்துறையில் மூத்த அதிகாரிகளுக்கு ஐஸ் வைக்கிறதுக்காக அவங்க கீழே வேலைபார்க்குற அதிகாரிகள் புத்தாண்டுக்கு புதுத்துணி எடுத்துட்டு வந்தாங்க. ரெண்டு ரெடிமேட் கடையே வைக்கிற அளவுக்கு துணி சேர்ந்திடுச்சு. இதெல்லாம் எப்பத்தான் ஓயப்போறதோ என்று நொந்து கொண்டார் குப்பண்ணா.

ஆங்கிலேயர்கள் நம் நாட்டைவிட்டுப் போய்விட்டாலும் கூட அவர்கள் நம்மிடையே விட்டுச்சென்ற வழக்கங்களில் சில வகைகளை நாம் கெட்டியாகப்பிடித்துக் கொண்டுள்ளோம். புத்தாண்டில் ஒருவருக்கொருவர் சந்தித்து கை குலுக்கிக் கொள்வதும் வாழ்த்துரை பரிமாறிக்கொள்வதும் தவறில்லை. உறவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளவும் நல்லிணக்கங்களை மேம்படுத்திக் கொள்ளவும் அது மிகமிக அவசியம். ஆக்கபூர்வமான செயல் என்றே சொல்லலாம். உயரதிகாரிகளுக்கு ஆடைகள் புதியதாக வாங்கித் தருவது என்பது சற்று உறுத்தலான சமாச்சாரம். அன்போடு, சிரிப்போடு மறுத்திருக்க வேண்டும். தன் கீழ் பணியாற்றும் அதிகாரிகள், பொறியாளர்கள், சிறப்புடன் வேலைகள் செய்ய ஊக்கம் தந்து உயரதிகாரிகள் மகிழ்ச்சியடைய வேண்டும். இதென்ன விசித்திரமான விநோதமான மனப்பாங்கு? சுயமரியாதையுள்ளவர்கள் இதையெல்லாம் செய்யக்கூடாது.

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் ஆறாவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பொதுச் செயலாளர் டி.முருகேசன் அவர்களின் செல்போனில் ரிங் டோன் என்ன தெரியுமா? '' என்று தணியும் இந்த சுதந்திர தாகம்? என்று மடியும் இந்த அடிமையின் மோகம்?''

இந்த தளபதியின் தலைமையை ஏற்றுக் கொள்ளுபவர்கள் சொல்லாலும், செயலாலும் வாழ்க்கையில் நடந்து கொள்ள வேண்டாமா?

உணர்வுள்ள, உயிருள்ள பொறியாளர்களே ஒருகணம் சிந்திப்பீர். பழமையை நடப்புக்கு உதவாத காரியங்களை தூக்கியெறியுங்கள். புதுமையை நாடுங்கள். நாடும் நாமும் சேர்ந்தே முன்னேறுவோம்.

# கூட்ட நடவடிக்கை குறிப்புகள்

தமிழ்நாடு பொறியியல் சங்கம், தமிழ்நாடு டிப்ளமாப் பொறியாளர் பேரவை தமிழ்நாடு ஓய்வு பெற்ற பொறியாளர் சங்கம் சேலம் கிளைகள் மூன்றும் இணைந்து 11.01.2014 அன்று சேலத்தில் பொறிஞர். C.சண்முகப்பெருமாள் அரங்கில் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இறை வணக்கத்திற்குப் பின் பேரவை சேலம் கிளையின் இணைச் செயலர் பொறிஞர்.K.ஜெகதீசன் வரவேற்புரை நிகழ்த்தினார். தமிழ்நாடு பொறியியல் சங்க சேலம் கிளையின் தலைவர் பொறிஞர்.P.சண்முகம் தனது தலைமை உரையில் தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் "நூற்றாண்டு நிறைவு விழா" பற்றிய முன்னேற்பாடுகள், விழா சிறப்பாக நடைபெற டிப்ளமாப் பொறியாளர்களின் பங்களிப்பு, அனைவரும் கலந்து கொள்ளுதல் பற்றி விளக்கினார். பகுதிநேரப் பொறியியல் பட்டப்படிப்பு பெற்றதால் தான் தன்னைப் போல் பலருக்கும் பதவி உயர்வு கிடைத்தது என்றும் மேலும் பதவி உயர்வுகள் கிடைக்கும் என்றும் ஆகவே நாம் நன்றியுடன் நமது கடமையைச் செய்ய வேண்டுமென்றார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் சேலம் கிளையின் செயலர் பொறிஞர். R.வேதநாராயணன் தனது உரையில் தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் நூற்றாண்டு நிறைவு விழாவிற்கு சேலம் கிளையில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் குறைந்த அளவு ரூ.5000 அளிக்க வேண்டுமென்றும் இதுவரையில் நன்கொடை அளிக்காதவர்கள் விரைவில் அளிக்குமாறு கேட்டுக் கொண்டார். அடுத்ததாக தமிழ்நாடு பொறியியல் சங்க மேற்கு மண்டலச் செயலர் பொறிஞர். S.R.சுப்ரமணியன் அவர்கள் தனது உரையில், நமது சங்கத்தின் நூற்றாண்டு நிறைவு விழாவிற்கு மிக முக்கிய பிரமுகர்களிடம் இருந்து வாழ்த்துக்கள் பெறுவதிலும் விழாவில் கலந்து கொள்ள அவர்களின் இசைவினை பெறுவதிலும் மாநில பொதுச் செயலர் பொறிஞர்.D.முருகேசன் தனது வழக்கமான சங்கப்பணிகளுடன் அயராது பாடுபட்டு வருவதாகவும், ஆகவே சேலம் கிளையில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் தவறாது நன்கொடை அளித்தால் தான் விழா செலவுகளை ஈடு செய்ய முடியும் என்றார்.

பேரவை சேலம் கிளையின் செயலர் பொறிஞர். கைலாஷ் K.கிருஷ்ணமூர்த்தி அவர்கள், தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் நூற்றாண்டு நிறைவு விழாவினைக் காணும் பாக்கியம் நமக்கு கொடுத்துள்ளார் என்றும், ஆகவே அடிப்படையில் டிப்ளமாப் படிப்பு படித்த அனைத்து பொறியாளர்களும் இவ்விழாவில் கலந்து கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தினார். பணிநிறைவு பெற்ற டிப்ளமாப் பொறியாளர்கள் இவ்விழாவில் கலந்து கொள்ள மிகுந்த ஆர்வத்துடன் உள்ளதால் அவர்களின் சிரமங்களை குறைக்கும் வகையில், அவர்கள் அனைவரையும் ரயில் மூலம் சென்னைக்கு அழைத்துச் சென்று, விழாவில் கலந்து கொண்டபின் மீண்டும் சேலத்திற்கே பத்திரமாக கொண்டு வருவதற்காக ரயில் முன் பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவர்களில் 60 வயது நிறைந்த மூத்த பொறியாளர்களுக்கு 60 விழுக்காடு பயணச் சலுகை உள்ளதால், ஒவ்வொருவரிடம் இருந்து ரூ.300 மட்டும் முன்பணம் பெற்று ரசீது வழங்கியுள்ளதாகவும் விழா தேதி தெரிந்தவுடன் ரயில் பயண டிக்கட் பதிவு செய்யப்படும் என்றார். இதுவரையில் 30 பணிநிறைவு

பொறியாளர்கள் தொகை கொடுத்துள்ளதாகவும் மற்றவர்களும் தொகை கொடுக்க தயாராக உள்ளதாகவும் கூறினார். 60 வயதுக்குள் உள்ள பணியில் உள்ள அனைத்து டிப்ளமாப் பொறியாளர்களும் ரூ.450 மட்டும் கொடுத்தால், அவர்களுக்கும் டிக்கட் முன்பதிவு செய்து அவர்களும் மேற்படி விழாவிற்கு வசதியாக சென்று வரலாம் என்று தெரிவித்தார்.

பொறிஞர். ம.பலராமன், தலைவர் பேரவை சேலம் கிளை தனது உரையில் தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் நூற்றாண்டு விழாவிற்கு பேரவை சேலம் கிளையின் சார்பில் ரூ.50000/- இரு தவணைகளில் அளித்துள்ளதாகவும் இதில் பகுதிநேரம் பொறியியல் gl j ggbg;G f wf hj nghwpQH.i f yh\ ; K.கிருஷ்ணமூர்த்தி ரூ.6000 மும், பொறிஞர்.T.தியாகராஜன் ரூ.5000 மும், பொறிஞர்.S,ஞானசேகரன் ரூ.5000மும், பொறிஞர்.ம.பலராமன் ரூ.5000 மும் அடக்கம் என்றார். மேலும் தமிழ்நாடு ஓய்வு பெற்ற பொறியாளர் சங்கம் சேலம் கிளையின் சார்பாக இதுவரையில் ரூ.15000 நன்கொடை பெற்றுள்ளதை விரைவில் தமிழ்நாடு பொறியியல் சங்கத்திடம் கொடுக்க உள்ளதாகவும் உறுதி கூறினார்.

அடுத்து பொறிஞர்.V.N.சாம்பசிவம், துணைத்தலைவர் பேரவை மற்றும் பெருமன்ற சேலம் கிளைத்தலைவர் தனது உரையில் தான் பகுதிநேரம் பொறியியல் பட்டப்படிப்பு பெற்றதால்தான் பதவி உயர்வு கிடைத்ததென்றும், தனது பங்காக ரூ.5000 ஐ நூற்றாண்டு நிறைவு விழாவிற்கு அளித்துள்ளதாகக் கூறினார். மேலும் தனது உரையில் தனது மகன் பொறிஞர். ஆனந்த் அடிப்படையில் ஒரு டிப்ளமாப் பொறியாளர் என்றும் தற்போது அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியாவில் பணியில் உள்ளார் என்றும் அவர் சேலம் வந்திருந்த பொழுது பேரவையின் தலைவர் பொறிஞர்.ம.பலராமன் அவர்களும் செயலர் பொறிஞர். கைலாஷ் கிருஷ்ணமூர்த்தி அவர்களும் எனது மகனை சந்தித்து நூற்றாண்டு விழா பற்றி விளக்கி வேண்டி ரூ. 5001 ஐ நன்கொடையாகப் பெற்றனர் என்றும் கூறினார்.

பொறிஞர். சி.இராமசாமி, மலர் வெளியிட்டுக் குழுத்தலைவர் தனது உரையில், தான் பகுதி நேரம் பொறியியல் பட்டப்படிப்பு படித்ததால் தான் 1999ல் செயற்பொறியாளர் பதவி உயர்வு பெற முடிந்தது என்றும், எப்பொழுதும் சங்கத்தின்பால் மிகுந்த ஈடுபாடு கொண்டவன் என்றும், விழாவிற்கு நன்கொடையாக ரூ. 5000 ஏற்கனவே கொடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டார். தனது பணி எப்பொழுது தேவைப்படினும் கடமையுணர்வுடன் தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளைக்கு அளித்து வருவதாகவும் கூறினார். சேலத்தில் உள்ள தமிழ்நாடு பொறியியல் சங்கம், பேரவை, ஓய்வு பெற்ற பொறியாளர் சங்கம் இணைந்து நடத்தும் விழா தமிழகத்திற்கே ஒரு முன்னோடி என்றார். இம்மூன்று கிளைகளும் சேர்ந்து பல விழாக்களை நடத்தியதும் வரலாற்று புகழ் பெற்ற பல நூல்கள் வெளியிட்டதும் அதற்கு மிகமிக முக்கிய பிரமுகர்களின் வாழ்த்துரைகள் பெற்று வெளியிட்டதும், எதையுமே செய்ய முடியாதவர்களுக்கு பொறுத்துக் கொள்ள முடியாமையே பொறாமையாக மாறி, பொய்களை அள்ளி வீசுகின்றனர். எல்லா செயல்களும் ஒருங்கிணைந்து சேலத்தில் சிறப்பாக நடை பெறுவதை பொறுத்துக் கொள்ள முடியாதவர்களால், பொறாமை ஏற்பட்டு சேலம் கிளைக்கு சம்மந்தம் இல்லாதவர்கள் பொய்யை மூலதனமாகக் கொண்டு பேசுவதும் அதை அப்படியே இதழ்களில் வெளியிடுவதும் பொறியியல் படித்து, கவுரமான பதவியில் இருந்து பணி நிறைவு பெற்றவர்களுக்கு அழகல்ல என்றார்.

தியாகச் செம்மல் பொறிஞர். சி.ப.சண்முகம் அவர்கள் தனது உரையில் சேலம் கிளைக் கட்டட 1995 ல் தலைவராக இருந்த தலைவர் பொறிஞர்.A.M.பாபு, செயலர் பொறிஞர். K.ஆறுமுகம், மற்றும் பொறுப்பாளர்கள், கட்டடக் குழுவினரால் மிகவும் சிறப்பாக கட்டி முடிக்கப்பட்டு அக்கட்டடத்தில் நானும் எனது மனைவியும் அமர்ந்து புதுமனை புகுவிழா நடத்தியதும் அதற்குப்பின் இக்கட்டடத்திற்கு முதல் மாடி கட்ட அப்போதைய பொறுப்பாளர்கள் பொறிஞர்கள் K.சேகர், P.ஆசைத்தம்பி, K.கிருஷ்ணமூர்த்தி, S.ஆறுமுகம் போன்றவர்களும், அப்போதைய த.நா.பொ.சங்கத்தின் மாநிலத்தலைவர் தெய்வத்திரு. பொறிஞர்.C.சண்முகப்பெருமாள், ஆலோசனையின் பேரில் கட்டடக் குழுத்தலைவராக பொறிஞர்.ம.பலராமன் முழு பொறுப்பேற்று இந்த கட்டடத்தினை குறிப்பிட்ட காலத்தில் முடித்து திறப்பு விழா நடத்தியதும் ஒரு சரித்திர நிகழ்வே. இந்த முதல் மாடி கட்டிடத்திற்கு பொறிஞர். ம.பலராமன் முயற்சி செய்து ரூ. 1,08,000 நன்கொடை பெற்றுத்தந்துள்ளார்.

பெருமை வாய்ந்த இக்கட்டத்திற்கு எந்த நன்கொடையும் வழங்காதவர்கள் 15.08.2012 ல் நடைபெற்ற பொறிஞர்.S.N.கொளந்தன் பவழ விழா அன்று, பெருமன்றத் தலைவர் பொறிஞர்.V.N.சாம்பசிவம் பற்றி தரக்குறைவான சுவரொட்டிகள் தயார் செய்து அரசின் மிகமுக்கியமான பாதுகாப்பாக உள்ள பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகை வளாகத்தில் உள்ளே புகுந்து காம்பவுண்டு சுவர், பொறிஞர்.T.ஜானகிராமன் இல்லம் ஆகிய இடங்களில் இரவோடு இரவாக ஒட்டி இழிவுபடுத்தினார்கள். தமிழக அரசின் CBCID ஆய்வாளர் இது பற்றி புகார் கொடுக்குமாறு கேட்டபொழுதும் மூத்த பொறியாளர்களும், பொறிஞர் K. சேகர் அவர்களும் கலந்து பேசி எந்த புகாரும் காவல்துறைக்கு அளித்தால் நமக்கு எதிராக செயல்படும் நமது சகோதரப் பொறியாளை பாதிக்கும் என்பதால் மறப்போம் என்று கூறி ஒரு அறிக்கையை மட்டும் த.நா.பொ. சங்கத்திற்கு அனுப்பிவிட்டார்கள். குறிப்பாக எனது நீண்டகால நண்பர் பொறிஞர்.கோ.சீனுவாசன் அவர்கள் எனது மனைவி காலமான செய்தி கேட்டு துக்கம் விசாரிக்க சென்னைக்கு வர இயலாவிடினும் நான் சேலத்திற்கு வரும் செய்தியை பொறிஞர் ம. பலராமன் கூரியர் தபால் மூலம் அனுப்பியும் சேலத்தில் என்னை சந்தித்து ஆறுதல் கூறும் மனித மரபை கூட புறந்தள்ளி விட்டு என்பேரில் வருத்தம் ஏற்பட நான் ஏதும் செய்யவில்லை போல. ஆகவே அவரையும் மற்ற மூவரையும் த.நா.பொ.சங்க கட்டடங்களில் நுழைய கட்டட உரிமையாளர்கள் 6 மாத காலம் தடை விதித்ததற்கு நான் எந்த விதத்திலும் சம்மந்தப்படவில்லையே. இப்பிரச்சினைப் பற்றி என்னை கூப்பிட்டிருந்தாலும் அனைவரும் அமர்ந்து மனம் திறந்து பேசி சமாதானமாக, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து சங்கத்தின் நலன் காத்திருக்கலாமே என்ற வருத்தம் தனக்குள்ளது என்றார்.

பொறிஞர். S.N. கொளந்தன், தமிழ்நாடு ஓய்வு பெற்ற பொறியாளர் சங்க நாமக்கல் மாவட்ட பரதிநிதி அவர்கள் தான் சார்ந்த நெடுஞ்சாலைத் துறை சார்பாக, பொறியியல் சங்கத்தின் நூற்றாண்டு விழாவிற்கு 15 பொறியாளர்களையாவது சென்னைக்கு அழைத்து வருவதாகவும், கனிசமான தொகையை நன்கொடையாக அளிக்க முயலுவதாகவும் உறுதி கூறினார். தனக்கு பெருமன்றம் சார்பாக பவழ விழா எடுத்து மலர் வெளியிட்டதற்கு என்றும் நன்றியுடன் உள்ளதாகவும், அவ்விழாவிற்கு நன்கொடை அளித்தவர்களுக்கு நன்றி கூறினார். மேலும், அவ்விழாவிற்கு தனது மகன்கள் ரூ.25000 நன்கொடை அளித்துள்ளதையும் நினைவு கூர்ந்ததுடன், டெல்லியில் உள்ள "AIFODE" - DUTT Bhawan கட்டட நிதியாக ரூ. 8155 கொடுத்துள்ளதாகவும் கூறினார்.

தமிழ்நாடு பொறியியல் சங்க முன்னாள் தலைவரும் தற்போதைய தமிழ்நாடு ஓய்வு பெற்ற பொறியாளர் சங்கத்தின் தலைவருமான மூத்த பொறியாளர் இரா. வெங்கடசுப்பு அவர்கள் தனது உரையில் சங்கத்தின் இயக்க வரலாற்றினை தான் எழுதி வரும் விபரத்தைக் கூறினார். நூற்றாண்டு விழாவிற்கு, தமிழ்நாடு பொறியியல் சங்கம், தமிழ்நாடு டிப்ளமாப் பொறியாளர் பேரவை மற்றும் தமிழ்நாடு ஓய்வு பெற்ற பொறியாளர் சங்கம் ஆகியவைகளின் உறுப்பினர்கள் தனது நன்றியினை தெரிவிக்கும் வகையில் கணிசமான நன்கொடை அளிப்பதுடன், நமது வாழ்நாளில் விழாவில் பங்கேற்க கிடைத்த ஒரு அருமையான வாய்ப்பினை குடும்பத்துடன் பங்கேற்று சிறப்பிக்குமாறு கேட்டுக்கொண்டார். தவிரவும் தமிழ்நாடு பொறியியல் சங்கத்தில் உறுப்பினராக இருந்து நூற்றாண்டு நிறைவு விழாவில் கலந்து கொள்ளும் பணிநிறைவு பெற்ற பொறியாளருக்கு தமிழ்நாடு ஓய்வு பெற்ற பொறியாளர் சங்கம் (REAT) சார்பில் நினைவுப் பரிசு வழங்க திட்டமிட்டுள்ளதாகவும் அறிவித்தார். சேலத்தில் தமிழ்நாடு பொறியியல் சங்கம், பேரவை, தமிழ்நாடு ஓய்வு பெற்ற பொறியாளர்கள் சங்கம் ஆகியவைகள் இணைந்து இம்மாதிரி சிறப்பான விழா எடுப்பதும் நூல் வெளியிடுவதும் மிகச் சிறப்பே என்றார்.

தமிழ்நாடு டிப்ளமாப் பொறியாளர் பேரவையின் மாநிலத் தலைவரும் தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் முன்னாள் மாநிலத் தலைவருமான பொறிஞர்.M.ஊர்காவலன் அவர்கள் தனது உரையில் தமிழ்நாடு பொறியியல் சங்க நூற்றாண்டு நிறைவு விழாவில் அனைவரும் தவராமல் கலந்து கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தினார். மேலும் எல்லா டிப்ளமாப் பொறியாளர் சங்கங்களுக்கும் தாய்ச் சங்கமான தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் நூற்றாண்டு விழாவில் பங்கேற்க மாட்டோம் என்றும் விழாவிற்காக என்று உறுதிமொழி கொடுத்து வசூலித்த நன்கொடை ரூ. 8.00 இலட்சத்தினை தமிழ்நாடு பொறியியல் சங்கத்திற்கு அளிக்காமல் நம்பிக்கை துரோகம் செய்த பெருமன்றத்தின் செயல் டிப்ளமாப் பொறியாளர் சங்கங்களில் ஒரு கரும்புள்ளி என்றார். இதுவரை எந்த நோக்கத்திற்காக நன்கொடை பெற்றோமோ அதன்படி கொடுத்து விட்டு, பிறகு வசூலிக்காமல் இருப்பது தானே மனிதப்பண்பு. அதைச் செய்யாமல் பெற்ற தாயின் நலனுக்கு என்று நன்கொடை வசூலித்துவிட்டு, அதை தாயிடம் கொடுக்காதது தாய்க்கே செய்யும் துரோகம் அல்லவா. இச்செயலுக்கு என்றும் மன்னிப்பே கிடையாது என்றார்.

பொறிஞர். S. பெரியசாமி, மாநிலத் தலைவர், தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் சங்கம், மதுரை அவர்கள் தனது உரையில் டிப்ளமாப் பொறியாளர்களின் நல்வாழ்விற்கு பாடுபடும் தமிழ்நாடு பொறியியல் சங்கம் எல்லா டிப்ளமாப் பொறியாளர் சங்கங்களுக்கும் தாய்ச் சங்கமாகும். தமிழ்நாடு பொறியியல் சங்கம் பல போராட்டங்களுக்குப்பின் பெற்ற அரசாணையின் உதவி கொண்டு தான் வேளாண்மை பொறியியல் துறையில் டிப்ளமாப் பொறியாளர்களுக்கு பதவி உயர்வு ஆணை பெற முடிந்ததை விளக்கினார். தான் தமிழ்நாடு பொறியியல் துறையில் உறுப்பினராக இல்லையே என்ற வருத்தம் எப்போதும் உண்டு என்றார். ஆயினும் தமிழ்நாடு பொறியியல் சங்கம் மற்றும் டிப்ளமாப் பொறியாளர் பேரவையுடன் தமிழ்நாடு வேளாண்மை பொறியாளர் சங்கம் நல்ல உறவுடன் உள்ளதாகக் குறிப்பிட்டார். வேலூரில் நடைபெற்ற தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் நூற்றாண்டு துவக்க விழாவின் பொழுது தலைமைப் பொறியாளர் (பொது) அவர்கள் தியாகச் செம்மல் பொறிஞர் சி.ப.சண்முகம் அவர்களை மேடைக்கு அழைத்து சிறப்பு செய்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கு அறிமுகம் செய்து வைத்ததில் இருந்தே தமிழ்நாடு பொறியியல்

சங்கத்திற்காக குறிப்பாக டிப்ளமாப் பொறியாளர்களின் நலன்களுக்காக அவர் செய்த தியாகம் ஈடு இணையற்றது என்றார். பக்கவாத நோயினால் 2003ல் பாதிக்கப்பட்டு ஒரு கையும் காலும் செயல் குறைந்த நிலையிலும் சென்னையில் இருந்து கன்னியாகுமரி வரையிலும் நடைபெறும் கூட்டங்களில் கலந்து கொள்வது நமக்கெல்லாம் உற்சாகம் அளிக்கின்றது என்றார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம், தற்போது மிகவும் நெருக்கடியான நிலையில் உள்ளது. ஒரு பக்கம் டிப்ளமாப் பொறியாளர்களுக்கு இதுவரையில் அளித்து வந்த சலுகைகளை மாற்றுச் சங்கத்தினர் சதி செய்து அவைகளை குறைக்கவும், ரத்து செய்யவும், அவர்களுடைய பண பலத்தால் அரசிடம் முயல்வதும், அதில் வெற்றி அடையாவிடில் வழக்குகள் தொடுத்து அலைக்கழிப்பதும், நடந்து கொண்டு வருகின்றது. மறுபக்கம் த.நா.பொ. சங்க செயற்குழு மற்றும் செயற்குழுவில் நிறைவேற்றிய தீர்மானங்களின்படி செயல்பட்டு தொடர் நடவடிக்கைகள் நடத்த வேண்டியும் உள்ளது. தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் நூற்றாண்டு விழாவிற்கு வசூலித்த ரூ.8.00 இலட்சத்தினை சங்கத்திற்கு அளிக்காமல் பெருமன்றம் செய்த துரோகம். அத்துடன் நில்லாமல் உண்மையற்றவைகளை, கடிதங்கள் மூலம் பெருமன்ற செய்தி மூலம் வெளியிட்டு அவதூறு கிளப்புதல்.

முக்கியமாக த.நா.பொ. சங்கத்திற்குரிய கட்டடங்களில், இச்சங்கத்தின் நலன்களுக்கு எதிராக செயல்பட்ட பெருமன்றத்தின் பொறிஞர்.T.V.கோமதி நாயகம் பொறிஞர்.K.V.வெங்கடேசன், பொறிஞர்.கோ.சீனிவாசன், பொறிஞர்.S.S.சாந்தாராம் ஆகியோர்களை, த.நா.பொ. சங்க பொறுப்பாளர்கள் கூட்ட முடிவின்படி, சங்க கட்டடத்திற்கு ஆறு மாதம் வருவதை தடை செய்துள்ளார்கள். பெருமன்ற மைய அமைப்போ அல்லது மண்டலங்களோ நுழையவும், கூட்டம் நடத்தவும் தடை ஏதும் இல்லை என்று தெளிவாக கடிதம் மூலமும், பொறியியல் கதிர் மூலமும் வெளியிட்டும், அதையே பெருமன்ற கூட்டம் நடைபெற தடை விதித்ததாகக் கூறி காலி செய்து கொண்டு தன்னிச்சையாக சென்றுவிட்டார்கள்.

1997 முதல் 2013 வரையில் 16 வருடங்கள் பெருமன்றம் இயங்கவும், கூட்டங்கள் நடத்தவும் இலவசமாக இடம் கொடுத்து, மின் கட்டணம், குடிநீர் கட்டணம் போன்றவைகள் ஏதும் வசூலிக்காமலும் அங்குள்ள ஒலிபெருக்கி, மேசை, நாற்காலி போன்றவைகளை பயன்படுத்த எந்த விதமான கட்டுப்பாடுகளும் விதிக்காமல் அனுமதித்த பெருந்தன்மையை கூட கருத்தில் கொள்ளாமல் த.நா.பொ.சங்கத்தையே தாக்கி பேசுவதும் எழுதுவதும் நியாயமா. தற்போது ரூ.10000 வீதம் மாத வாடகையில் இயங்கும் பெருமன்றம் கடந்த 16 வருடங்களுக்கு சராசரி மாத வாடகை ரூ.5000 என்றால் கூட ரூ. 9,60,000 செலவிட்டிருக்க வேண்டும் (இது மின் கட்டணம், குடிநீர் தவிர்த்து). இதை கூட கருத்தில் கொள்ளாமல் நூற்றாண்டு விழாவிற்காக வசூலித்த தொகை ரூ.8.00 இலட்சத்தினை சங்கத்திற்கு அளிக்காமல் சென்றது துரோகம் அல்லவா.

இப்படி பல இன்னல்களுக்கு இடையே முழு பொறுப்பையும் நமது சகோதரர் பொறிஞர்.D.முருகேசன் ஏற்று திறம்பட செய்து வருகின்றார்.

ஏசு பிறப்பதற்கு முன்பே பிறந்த கிரேக்க அறிஞர் கூறியதை நினைவிற்கு கொண்டு வர விரும்புகின்றேன்.

தனக்கென்று தனியாக ஒரு குடும்பம் இல்லாத மனிதர்களே தலைமைப் பொறுப்பை ஏற்க வேண்டும் என்பது பிளேட்டோவின் (PLATO) அழுத்தமான அபிப்பிராயம். அதற்கு காரணம் மனைவி, மக்கள் குடும்பம 'என்று அன்றாடம் பாசத்தினால் அலைக்கழிக்கப்படுபவர்கள் விரைவில் ஆசை வலையில் வீழ்ந்து தன் நிலை தாழ்ந்து தான் ஏற்றுக் கொண்ட லட்சியத்தில் இருந்து வெகு தூரம் விலகி நாளடைவில் ஊழலின் உற்பத்தியாளராக உருப்பெற்று விடுவார்கள் என்ற நியாயமான அச்சத்தில் தான் நெருங்கிய உறவினர்களை நெஞ்சத்தில் வளர்த்துக் கொள்ளாதவர்களை மட்டுமே வையகத்தலைமை கொள்ளவேண்டும் என்று விதி ஒன்றைச் செய்தவர் பிளேட்டோ.

இந்த இலக்கணப்படி வாழ்ந்து காட்டும் தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத பொதுச் செயலர் பொறிஞர்.D.முருகேசன் அவர்களின் தொண்டு சிறப்புற நாம் அனைவரும் ஒன்றுபட்டு அவருக்கு துணையாக நிற்போம் என்று கூறி முடித்தார்.

விழா இறுதியில் த.நா.பொறியியல் சங்கத்தின் பொருளாளர் பொறிஞர்.S.பாண்டியன் தனது உரையில் பொறிஞர் தியாகச் செம்மல் சி.ப.சண்முகம் அவர்களிடம் 1982ல் ஆத்தூரில் பணி புரிந்த பொழுது ஏற்பட்ட இனிய வழிகாட்டுதலை நன்றியுடன் கூறி அப்படிப்பட்ட மாமனிதர் சங்கத்தின் நூற்றாண்டு விழாவிற்கு வழிகாட்டுவதற்கும் மற்றும் அனைவருக்கும் நன்றி கூறினார். நாட்டுப் பண்ணுடன் விழா இனிதே நடைபெற்றது.

**இரங்கல் செய்தி**

கன்னியாகுமரி கிளையின் முன்னாள் உறுப்பினரும், தூத்துக்குடி கிளையின் முன்னாள் தலைவரும், கன்னியாகுமரி கிளையின் தலைவர் P.சசிகுமார் அவர்களின் சகோதரருமான P. தாமோதரன் நாயார் அவர்கள் 12.12.2013 அன்று இயற்கை எய்தினார்.

இழப்பால் வாடும் இதயங்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

**நன்கொடை**

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தஞ்சாவூர் கிளையின் உறுப்பினர் பொறியாளர் G.மணிவண்ணன் இளநிலைப் பொறியாளர் (ஓய்வு) அவர்களின் மகள் திருமணத்திற்காக ரூ.1000 (ரூபாய் ஆயிரம்) நன்கொடையாக தஞ்சை கிளைக்கு வழங்கியுள்ளார்.



MERIT CERTIFICATE

Awarded to

Thiru / Tmt / Selvi ...S. JEYAKUMAR, JUNIOR ENGINEER...

during the Republic Day function held on 26.01.2014

in appreciation for his / her meritorious service rendered in ...PWD (WRD) DEPT...

S. Nagarajan, I.A.S.,
Collector,
Kanniyakumari District.

26.01.2014 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்ற 65வது குடியரசு தினவிழாவில் சிறப்பாக அரசுப்பணி செய்த பொதுப்பணித்துறை திரு. எஸ்.ஜெயகுமார், இளம் பொறியாளர் மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் இருந்து பெற்ற சான்றிதழ்.



# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஜய ஆண்டு மாசி மாதம் 19 ஆம் நாள் (03.03.2014) திங்கள்கிழமை துவிதியை திதியும் உத்திரட்டாதி நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய சுபயோக நன்னாளில் காலை 9.00 மனி முதல் 10.30 மணிக்குள் மீனம் லக்கினத்தில் சுபவேளையில்

தேனி மாவட்டம் பூதிப்புரம் தெய்வத்திரு. S. ராமசாமி ஆசிரியர் தெய்வத்திருமதி. சுருளியம்மாள் இவர்களின் மகன்வழி பேரனும் சுருளிப்பட்டி தெய்வத்திரு. S.T. அழகர்சாமி கவுடர், ஜேனம்மாள் இவர்களின் மகள்வழி பேரனும் இரா.தமிழரசன் சுகன்யா இவர்களின் குமாரனுமாகிய திருநிறைச் செல்வன்


**T. ஏகலைவன்**, B.E.Marine

Transocean Shipping Pvt. Ltd, Mumbai.

தேனி மாவட்டம் ஓடைப்பட்டி தெய்வத்திரு. ஆர். போ. ர. போரைய கவுடர் புத்தியம்மாள் இவர்களின் மகன் வழிப் பேத்தியும், ஈரோடு மாவட்டம் சிக்கரசம்பாளையம் தெய்வத்திரு. நஞ்சுண்டன், தெய்வத்திருமதி. கரியம்மாள் இவர்களின் மகள் வழிப் பேத்தியும் போ. இளங்கோவன் மணியம்மா இவர்களின் குமாரத்தியுமாகிய திருநிறைச் செல்வி

**E. ரம்பா**, B.E.,

**இவர்களது திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மேற்படி வைபவம் ஓடைப்பட்டி ஸ்ரீ நந்தகோபால் திருமண மண்டபத்தில் நடைபெறுவதால் தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்து மணமக்களை வாழ்த்தியருளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**



**தங்கள் அன்புள்ள,**
**திரு. இரா. தமிழரசன்**, **J.E.**, (ஓய்வு)
தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கோவை
திருமதி. த. சுகன்யா .
த. ஏகசுதன், B.E.,
திரு. இரா.பார்த்திபன், பூதிப்புரம்
திருமதி. பா. ரேவதி
பா. சுருதி B.Tech.,
Cell: 9751690002 / 9486313896

Under Postal Regd No. TN/CH/(C)/358/12-14 & TN/PMG (CCR) WPP No.308/2012-14
Date of Posting 5th of Every Month. R.N.I. Registration No.R.33590/78.

**FEBRUARY 2014**

# தமிழக அரசுக்கு தவறான, பொய்யான தகவல்கள் அளிக்கும் பொறியாளர் சங்கத்தை வன்மையாக கண்டிக்கிறோம்

2014 ஜனவரி பொறியாளர் இதழில் பக்கம் 29ல் அரசுக்கு பொறியாளர் சங்கம் அளித்துள்ள கடிதத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

“எங்களுக்கு கீழ் பணியாற்றும் வரைவாளர்கள் (Draughting Offi-cers) இளநிலைப் பொறியாளர்கள் (juniorEngineers) ஒப்பிட்டு பட்ட பொறியாளர்களாகிய எங்கள் சம்பளத்தைக் குறைத்துப் பரிந்துரை செய்யப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது எங்களுக்கு மிகவும் வருத்தத்தினை தருகிறது.”

உதவிப் பொறியாளர்களுக்கு கீழ் இளநிலை பொறியாளர்கள் பணியாற்றுவதாக பொய்யாக எழுதப்பட்டிருக்கிறது. இது அப்பட்டமான, அராஜகமான பொய் தகவலாகும். விதிகளில் (Rules) உள்ளதையே பொய்யாக மாற்றி எழுதியிருக்கும் பொறியாளர்கள் சங்கத்தை வன்மையாக கண்டிக்கிறோம்.

–தமிழ்நாடு பொறியியல் சங்கம்.

நமது சங்கத்தின் **Website : www. tnengga. org**
**email id : tneapwd@yahoo.co.in**

தந்தி: பொறியாளர்
தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

பொறியியல் கதிர்
PORIYIYAL KADHIR

அனுப்புநர் :
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை – 600 005.

முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

Published on 7.2.2014
Posting on 10.2.2014

REGD. NEWS PAPER
POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

EDITED BY: Er. D. MURUGESAN, D.C.E, B.Tech, M.Tech, GENERAL SECRETARY, TNEA, PWD, CHEPAUK, CHENNAI-5
PUBLISHED BY: Er. S. KANNAN, D.C.E. B.E., PUBLICATION SECRETARY, T.N.E.A, PWD, CHEPAUK, CHENNAI-5.
PRINTED BY: Mr. K.P.THIYAGARAJAN AT KALAIYARAM PRINTERS, 182, BELLS ROAD, CHEPAUK, CHENNAI-5. PHONE: 2854 8223.